**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 26.03.2026**
**OS. No. 91/2023**
**வழக்கு சாட்சி PW.1– ஷாகிதாபானு, த/பெ. ஷாகுல்ஹமீத்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) எங்கள் சொத்தில் வந்து பிரதிவாதி எதுவும் பிரச்சனை செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எங்கு குடியுள்ளேன் என்றால் திருச்செங்கோட்டில் 8, 9 வருடங்களாக குடியுள்ளேன். பிரதிவாதி என்னுடைய தாய்மாமன் என்றால் சரிதான். தாவா சொத்தை 1985ம் வாக்கில் என் பாட்டி மாபு கிரையமான ஆறுமுகம் முதலியாரிடம் இருந்து பெற்றார். அதன் பிறகு என் பாட்டி தாவா சொத்தை என் மாமா கபூருக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்துவிட்டார். என் மாமாவிற்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு முன்பே பிரதிவாதி ரகுமான் தாவா சொத்திற்கு அருகிலுள்ள வீட்டில் குடியுள்ளார் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 2020ல் என் மாமா கபூரிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெறுவதற்கு முன்பும் பிரதிவாதி ரகுமான் தாவா சொத்திற்கு அருகிலுள்ள வீட்டில் குடியுள்ளார் என்றால் சரிதான்.

2) நான் கிரையம் பெறுவதற்கு முன்பு வரை பிரதிவாதிக்கும், தாவா சொத்தின் உரிமையாளர்களுக்கும் எவ்வித பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, அவ்வப்போது பிரச்சனை வந்துள்ளது. 2020ல் நான் கிரையம் பெற்ற பிறகு நான் தான் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2020ல் நான் கிரையம் பெற்றவுடன் பிரதிவாதி தாவா சொத்தை தனக்கு விற்கும் படி என்னிடம் கேட்டார். பிரதிவாதி அவ்வாறு விலைக்கு கேட்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வேயரை அழைத்து சொத்தை அளக்க முற்பட்ட போது பிரதிவாதி பிரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ள தேதிகளில் இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் காவல்

கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளேன். எங்கள் அருகிலுள்ள நங்கவள்ளி காவல் நிலையத்தில் 2, 3 முறை சொல்லியும் அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் புகாரை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்தோம்.

3) நாங்கள் கொடுத்த புகார் பொய்யானது என்பதால் தான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், அதேபோல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, பிரதிவாதியை அழைத்து விசாரித்தார்கள் பிரச்சனை செய்யமாட்டேன் என்று அவரும் எழுதி கொடுத்துள்ளார். நான் புகார் கொடுத்தற்கு ஆதரவாக அதன் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நான் வழங்கியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நானே வழக்கிற்காக தயார் செய்த புகார் மனுவைதான் கொடுத்துள்ளேன் என்றும், அதற்குண்டான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாகவே புகார் கொடுத்திருந்தால் அதற்குண்டான ரசீதை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, ரசீது என்னிடம் உள்ளது. தாவா சொத்தை அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் வந்தாரா என்றால் வந்தார். நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை சரியாக அளக்காததால் பிரதிவாதி ஆட்சேபனையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமாள ன்றால் தெரியும், ஆனால் நீதிமன்ற ஆணையர் சரியாக தான் அளந்துள்ளார். நீதிமன்ற ஆணையர் F Stone கல்லை அடையாளம் தெரிந்து கொள்ளாமலேயே அளந்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடைய வீட்டை எங்களுடைய வீட்டுடன் இணைத்து சேர்த்து மாடி படி கட்டியுள்ளதாக தவறாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) பிரதிவாதி கட்டியுள்ளதாக சொல்லும் மாடிபடியானது சொத்தை என் மாமவிற்கு செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு முன்பே பிரதிவாதியின் தந்தையால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் அவருடைய வீட்டிற்கு வடபுறமுள்ள 1 சென்ட் நிலத்தை நாங்கள் தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதை பற்றி கேட்டதால் தான் பொய்யாக இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி காலங்காலமாக அந்த சொத்தில் தான் வாழ்ந்து வருகிறார் என்றும் நான் தற்போது அதை கிரையம் வாங்கிவிட்டு, பிரதிவாதி பெயரில் பொய்யான வழக்கு தாக்கல் செய்துவிட்டு,பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.